RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2149

OPEN ACCESS

# ‘மணமான என் தோழிக்கு’ என்ற நாவலில் காணலாகும் திருமணமான பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

சு. ராதா [அ, *], சகோ.க. மங்களசுந்தரி [அ]

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி-627007, தமிழ்நாடு, இந்தியா.

# Problems Faced by Married Women in the Novel “Manamana En Tholikku”

S. Radha [a, *], K. Mangala Sundari [a]

[a] Department of Tamil, Sarah Tucker College (Autonomous), Tirunelveli-627007, Tamil Nadu, India

* Corresponding Author: santhanamradha2011@gmail.com

Received: 30-08-2022
Revised: 05-10-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

It is through the marriage relationship children are born, men and women attain the status of parents and their lives do not end just by giving birth to a child. A relationship formed in marriage is a bond that continues till their end. A woman can be a doer of good and as well as a destroyer too. Not a single atom can move without her. Women is the beginning and end of a world. The world was born out of her and the world was born for her. She is the mother, girlfriend, wife, daughter, granddaughter, friend and so on. She is the goddess of education, wealth, and valor. The phrase "A woman to be protected in childhood by a father, in youth by a husband, and in old age by a son" is a great insult for her. Isn't she responsible for the happiness of her family, her parents, her children? Isn't a woman who puts aside all her likes and dislikes and devotes her entire life to her parents, husband and children a martyr by birth? The article deals with the question, what is women’s condition and how is she treated today?

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

திருமணம் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுகின்ற போது ‘திரு’ வென்னுஞ்சொல், அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருட்களைத் தருகிறது என்கிறார் பெ. பழனியப்பன். தமிழ்ப்பேரகராதி ‘திருமணம்’ என்ற சொல்லிற்கு கூடுகை, திருமணம், நறுநாற்றம், வாசனைப்பொருள், மதிப்பு நன்னிலை ஆகிய பொருள் விளக்கத்தினைத் தருகின்றது. திருமணம் என்ற உறவின் மூலமாகவே குடும்பம் என்ற அமைப்பு உருவாகின்றது. குடும்பம் என்ற நிறுவனத்தில் குழந்தைகள் பிறந்து ஆணும், பெண்ணும் பெற்றோர் என்ற நிலையை அடைந்து வருவதோடு அவர்களின் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. திருமணத்தில் ஏற்பட்ட உறவு என்பது அவர்களது முடிவுநிலை வரையும் தொடருகின்ற ஒரு பந்தமாகும். அந்த பந்தத்தில் தான் எத்தனை எத்தனை பிரச்சனைகள் அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம். ‘திருமணமான என் தோழிக்கு’ என்ற நாவலில் நான்குவிதமானப் பெண்களைப் பற்றியும் அவர்கள் வாழ்வில் ஏற்படும் இன்னல்களைப் பற்றியும் அதை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பது பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

## திருமண வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள்

ஒரு மனிதனின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வாக அமைவது திருமணம் எனலாம். அத்தகையத் திருமணம் நடப்பதற்குள் நம் வாழ்வில் பல்வேறு விதமானச் சிக்கல்களைச் சந்திக்க

நேரிடுகின்றது. ஆண், பெண் இருவரையும் கணவன், மனைவியாக ஒன்றிணைத்துக் குடும்பமாக இணைக்கும் நிகழ்வாகிய திருமணம் பண வசதிக்கு ஏற்பவும், மரபிற்கு ஏற்பவும் அவரவர் மனப்பாங்கிற்கு ஏற்பவும் மாறுபடுகின்றது. திருமணம் என்ற விஷயத்தில் பெண்ணுக்கு பொறுப்புகள் மிக அதிகம். சோதனைகள் ஏராளம். இதுவரை இருபத்து மூன்று. இருப்பத்து நான்கு வருடம் சந்தோஷமாக வாழ்ந்த ஒரு பெண் வீட்டைவிட்டு வெளியேறி தன்னை முற்றிலுமாய் மாற்றி கொள்வதற்கு தயார் செய்துகொண்டு, வேறு ஒருவர் வீட்டில், வேறொரு மனிதரோடு சம்பந்தம் ஏற்படுத்தி, அவள் தனியே வாழவேண்டிய ஒரு நிர்பந்தம் அவளை பல்வேறு விதங்களில் அவஸ்தைக்குள்ளாக்குகிறது. செடியைப் பிடுங்கி வேறு இடத்தில் நடுவது போல, மனமாற்றம் உடல்மாற்றம் அவளுக்கு ஏற்படுகிறது. அதுவரை குதூகலித்து குழந்தையாய் ஆடிக்கொண்டிருந்தவள் சட்டென்று தன்னைச் சுருக்கிக்கொண்டு மற்றவர்களின்பால் அதிக கவனம் வைத்து இன்னும் அடக்கமாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

உணவு தயாரிக்கின்ற பொறுப்பும், கணவனின் உத்தியோகத்தைப் புரிந்து கொள்ளுகின்ற பொறுப்பும் அவரது உற்றார் உறவினர்களை ஆதரித்து அவர்கள் தன்மைக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பும், ஒரு குடும்பத்தைத் தூக்கி நிறுத்தி நிர்வகிக்க வேண்டிய பொறுப்பும் அவளுக்கு வெகு கட்டாயமாக வந்துவிடுகின்றன. அப்படிப்பட்ட பெண்களைப் பற்றி இனிக்காண்போம். அவர்கள் வாழ்வில் திருமணத்திற்கு பிறகு ஏற்பட்ட சிக்கல்களைப் பற்றியும் அதை அவர்கள் எதிர்கொண்ட விதம் பற்றியும் பார்ப்போம்.

## ஜெயஸ்ரீ

ஜெயஸ்ரீ ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு பிறந்தவர். அவர் சென்னையில் படித்து பட்டம் பெற்றவர். அப்படின்னு என்னைப்பத்தி பசங்க புத்தகத்துல படிக்கணும். சாகும்போது ஐயோ ஜெயஸ்ரீ செத்துப் போயிட்டாளா! அப்படின்னு ஒரு ஆயிரம் பேராவது நெஞ்சுல கை வச்சுக்கணும். ஆயிரம்பேர்ல ஒரு இருநூறு பேராவது வீட்டு வாசல்ல நிக்கணும். ஜாம் ஜாம்னு மயிலாப்பூர் சுடுகாட்டுக்கு ரோடெல்லாம் ரோஜாப்பூ உதிரப்போகணும்”

ஜெயஸ்ரீ தன்னுடைய பத்தொன்பதாம் வயதில் ஒரு தெருமுனையில் இவ்விதமாய் என்னிடம் பேசினாள் என்று ஆசிரியரே அவளைப் பற்றி இங்குக் குறிப்பிடுகிறார். பின்னர் ஜெயஸ்ரீயைப் பார்த்து பாலகுமாரன் அவர்கள் செய் நன்றாக செய் என்றார். ஆனால் கல்யாணம் பண்ணின்டு செய் என்றார். ஆனால் அவளோ கல்யாணம் செய்தால் இதெல்லாம் பண்ணமுடியாது என்கிறார் (Bala Kumaran, 2009).

பின்னர் 12 வருடங்களுக்குப் பிறகு ஜெயஸ்ரீயை சந்திக்கிறார். ஆசிரியர் மிகுந்த குடும்பப் பொறுப்பு மிகுந்தவளாய், இரண்டு குழந்தைகளை கண்ணும் கருத்துமாக பார்க்கின்ற தாயாய், எப்பொழுதும் பார்த்தாலும் புருஷனுடைய வெற்றியின் நினைவாகவே இருக்கின்ற பெண்மணியாய் மாறி இருந்தாள். உடனே ஆசிரியர் அந்த ஜெயஸ்ரீ பத்தொன்பது வயது ஜெயஸ்ரீ ஏதாவது செய்து சாதிக்க வேண்டும் என்ற ஜெயஸ்ரீ என்ன ஆனாள். எப்பொழுது காணாமல் போனாள் ஏன் காணாமல் போனாள் என்றார். அதற்கு அவள் இருக்கு ஸார்.

முதியோர் இல்லதுக்குப் போய் அங்க இருக்கறவாளுக்கெல்லாம் கதை சொல்லிவிட்டு வரேன் ஸார். நானும் என் கணவரும் முதியோர் இல்லம் போய் அங்க இருக்கறாளுக்கு நிறைய உதவி செய்வோம். குளிப்பாட்டி பவுடர் போட்டு உடம்பு பிடிச்சுவிட்டு, பாட்டுப்பாடி கதை சொல்லி எல்லாம் பண்றோம்.

கல்யாணம் பண்ணாம இதைப் பண்ண ஆரம்பிச்சிருந்தேன்னா உள்ளுக்குள்ள கோபத்தோட இருந்திருப்பேன். ச்சே ச்சே. என்ன இது கிழங்கள் அப்படின்னு எனக்கும் ஒரு சலிப்பு வந்து இருக்கும்.

கிழவி சொல்ற கதை எனக்கும் புரியறது. அவளுக்கும் அவ பையனுக்கும் சண்டைன்னு எனக்குத் தெரியறது. குடித்தனம் பண்ணதுனாலதான் அவ குடித்தனத்துடைய சிரமமெல்லாம் எனக்குத் தெள்ளத் தெளிவா புரியறது. கல்யாணம் பண்ணாத ஜெயஸ்ரீயா இருந்தா நான் வெறும் நிர்வாகியா

இருந்திருப்பேன். நல்ல மனுஷியா இருந்திருக்க மாட்டேன் ஸார். வெறும் முரட்டு நிர்வாகியாகவே இருந்திருப்பேன்.

ஜெயஸ்ரீ கிழவியாகி எழுபது வயசுல சாகறபோது அடடா இது எங்கப்பாவை தாங்கினாளே எங்கம்மாவை தாங்கினாளே. என் அத்தையை, சித்தியைத் தாங்கினாளே அப்படின்னு ஒரு ஆயிரம் பேர் நெஞ்சுல கை வச்சு அழனும் ஸார். ரோடு முழுக்க சிவப்பு ரோஜாவா உதிர நான் போவேன் ஸார். இதே மயிலாப்பூர் சுடுகாட்டுக்கு போகணும்.

ஜெயஸ்ரீ ஜெயித்து விட்டாள். தன் வாழ்க்கையில் ஜெயஸ்ரீயின் திருமணம் அவள் லட்சியத்திற்கு மிகமிக உதவியாய் இருந்ததை இதன்மூலம் நாம் அறியலாம்.

## சூடாமணி

சூடாமணி உயர் வகுப்பைச் சேர்ந்த மிகப்பணக்காரப் பெண். அவள் தந்தைக்கு தொழிற்சாலைகள் இருந்தன. மிக சாதாரணமான கணக்கராக இருந்த சூடாமணியின் தந்தை பெரிய தொழிற்சாலைக்கு அதிபரானார். கார் உதிரி பாகங்கள் தயாரிக்கின்ற வேலையில் ஈடுபட்டு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு பிரபலமானவர்.

சூடாமணி மிகக்கெட்டிக்காரி. சிறு வயதிலிருந்தே சுற்றிலும் வேலையாட்கள் உதவிக்கு பல்வேறு விதமான உறவுகள் என்று இருக்க, அவள் படிப்பில் சிறந்து விளங்கினாள். விளையாட்டில் சூரப்புலியாக மாறினாள். அவளை எதிலும் எவரும் ஜெயிப்பது என்பது முடியாத காரியமாக இருந்தது. பள்ளி வாழ்க்கைக்குப் பிறகு கல்லூரி வாழ்க்கை இன்னமும் இனித்தது. அவளுடைய சிறகுகள் பெரிதாக முளைத்தன. அவள் நாலா பக்கமும் பறந்து தன் அறிவைப் பெருக்கிக்கொண்டாள்.

கம்பெனி அவள் வசப்பட்டது. அம்மா அவளுடைய திருமணம் பற்றி கவலைப்பட்டாள். இன்னொரு கம்பெனியின் மேனேஜிங் டைரக்டருக்கு அவளைத் திருமணம் பேசினார்கள். இதுபற்றி சூடாமணிக்கு எந்த அபிப்ராயமும் இல்லாமல் இருந்தது. அவள் பலபேரை அழைத்துப்போய் பல பழைய கப்பல்களைப் பார்த்து ஒரு கப்பலைத் தேர்ந்தெடுத்தாள். பலகோடி கொடுத்து கப்பல் வாங்கினாள். அதேபோல் அவள் வீடும் பல வாலிபர்களைப் பார்த்து ஒரு வாலிபனைத் தேர்ந்தெடுத்தது. மிகப்பெரிய சீர் செய்ய முன் வந்தது.

கப்பல் ஐரோப்பாவுக்குக் கிளம்பிய நாளும். அவளுக்குத் திருமண நாளும் ஒன்றாக இருந்தது. அவனும் பணக்காரன் ஆனால் இந்த அளவுக்குப் பணமில்லை. கல்யாணத்திற்குப் பிறகு ஒரு டயர் கம்பெனியை பார்த்துக்கொள்ளுமாறு மாமனார் ஒப்படைத்தார். அது பெங்களூரில் உள்ளது. உடனே தன் மனைவியைப் பெங்களூருக்கு அழைத்தான். அவள் வர மறுத்துவிட்டாள். அவன் மட்டும் தனியாக அங்கு சென்று டயர் கம்பெனியைப் பார்த்துக்கொகண்டான்.

முதல் ஆயிரம் டயர் வெளியே கொண்டு வந்ததை நிகழ்ச்சியாகக் கொண்டாடினான். அதற்கு அவன் மனைவி வந்திருந்தாள் அன்று இரவே தனிவிமானத்தில் சென்னைக்குத் திரும்பினாள். இன்னொரு கப்பல்பேரம் நடக்கிறது என்று சொன்னாள்.

கப்பல் வாங்கி அதில் சரக்குகளை ஏற்றி அனுப்பி வைத்தாள். ஆனால் அது நடு கடலில் மூழ்கி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது.

நான் அப்பவே சொன்னேன். கப்பல் கம்பெனி வேண்டாம்னு கேட்டாங்களா? என்று யாரிடமோ சொல்வதைக் கேட்டு சூடாமணி அவனிடம் இன்னொருமுறை கப்பலைப் பற்றி நீங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால் என்னிடம் பேசுங்கள் என்று சண்டையிட்டாள். இருவரும் பேசிக்கொள்ள இரண்டு வருடம் ஆகியது. அவள் கணவனிடம் இருந்து பிரிந்தாள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் ராணியைப் போலவே வாழ்ந்தாள். இல்லறம் இல்லாததோ குழந்தை இல்லாததோ அவளுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அவள் தன்னுடைய தொழிற்சாலைகளைக் குழந்தையாக நேசித்தாள். அமைதியாக யோசித்துப் பார்த்தால் ஆளுமையுள்ள பெண்களைப் புரிந்துகொள்ள நாம் மறுக்கிறோம் என்பதே உண்மை.

அவள் ஜெயித்தவளா தோற்றவளா இன்னும் தொடர்ந்து உலகத்தில் விவாதம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் இருபத்து ஏழாயிரம் குடும்பங்களுக்கு சோறுபோட்டுக் கொண்டிருக்கிறாள் (Kuruvammal, 2016).

## பொற்கொடி

பொற்கொடி கமலக்கண்ணனை விரும்பி திருமணம் செய்து கொண்டாள். பொற்கொடி வீட்டில் சம்மதம் தெரிவித்தனர். ஆனால் கமலக்கண்ணன் வீட்டிலோ அவனுடைய தாய் சம்மதிக்கவில்லை. அதனால் அவன் தன் தாயிடம் திருமணத்தை மறைத்துவிட்டான். பகலில் வேலை முடிந்து பொற்கொடி வீட்டிற்கு செல்வான். இரவு வேலைக்கு சென்று வருவதுபோல் தன் தாய், வீட்டிற்கு சென்று விடுவான். ஒரு நாள் அவன் அம்மாவிற்கு திருமணம் முடிந்த விஷயம் தெரிந்து பொற்கொடி வீட்டில் போய் சண்டை போட்டாள். இரு வீட்டாருக்கும் சண்டை முற்றியது. கமலக்கண்ணனுக்கோ என்ன செய்வது என்றேத் தெரியவில்லை. வேலை செய்யும் இடத்தில் அவனுக்கு டெல்லிக்கு மாற்றலானது. அவன் தன் மனைவியையும் தன் தாயையும் விட்டுவிட்டு சென்றுவிட்டான். யாருடனும் தொடர்பில் இல்லாமல் டெல்லியில் போய் வேலைக்கு சேர்ந்து நன்றாக வேலைசெய்து முதன்மையான இடத்திற்கு வந்தான். அவன் முதலாளி ஒரு நாள் அவனிடம் அவனுடைய குடும்பத்தைப் பற்றி விசாரித்தார். அவனுக்கு சில யோசனைகளை சொன்னார். உடனே தன் மனைவிக்கு அவன் லெட்டர் போட்டான். பேசினான். குழந்தையைப் பற்றி விசாரித்தான். நான் விரைவில் வருகிறேன் என்றான். தன் தாயை வரவழைத்து காசி, இராமேஸ்வரம் டெல்லி என்று எல்லா இடங்களையும் சுற்றிக்காட்டினான். அவள் சென்னை வந்தவுடன் நேராக மருமகளிடமும் மருமகள் குடும்பத்தாரிடமும் சென்று மன்னிப்பு கேட்டாள்.

அந்த வீடு நிறைந்தது. எல்லா சண்டைகளுக்கும் நமது அறியாமைதான் காரணம். எல்லா உறவுகளின் பகைகளுக்கும் நம்முடைய அகம்பாவம்தான் காரணம். தான் மிகக்கெட்டிக்காரன். தன்னைத்தவிர இந்த உலகத்தில் வேறு எவருக்கும் எதுவும் தெரியாது என்ற அகங்காரம் சண்டையின் முதல்படி. அகங்காரம் ஒழிய வேண்டுமெனில் இறைத்தன்மை உள்ளே வரவேண்டும்.

## தனலெட்சுமி

நான் திருமணமாகி என் கணவர் வீட்டிற்கு நுழைந்த இருபத்தோராம் நாள் பத்தொன்பது வயதுப்பெண் வீட்டைவிட்டு இன்னொருவனோடு வெளியே போய்விட்டாள். திருமணம் செய்துகொண்டு கண் காணாமல் போய்விட்டாள். என் மாமியார் நீ வந்த வேளை என்று குறை சொன்னபோது அதை மறந்து என் வீட்டுக்காரர் உட்பட எவரும் எதுவும் சொல்லவில்லை. எனவே நான் அவளைப் பார்த்து வருகிறேன் என்று தன்னந்தனியாக அவள் இருக்கின்ற இடத்தை நோக்கிப் போனேன். அவளைப் பார்த்து வீட்டிற்கு அழைத்து வந்து தன் அப்பாவிடம் விஷயத்தைக் கூறினாள். அவள் அப்பா ஊர்களில் கட்டப்பஞ்சாயத்து பேசி முடிக்கிற பெரியவர் தன் அப்பா வந்து பேசி முடித்து நல்ல முறையில் குடும்பத்தினரின் சம்மதத்தோடு இருவருக்கும் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார்.

திருமணத்திற்குப் பிறகு கிடைத்த அப்பாவின் அரவணைப்பைப் பயன்படுத்திக் கொண்டு தனலெட்சுமி நன்றாக வளர்ந்தாள். தன் புருஷனை நாலாபக்கமும் விரட்டி பெரியாளாக்கினாள். இரண்டு குழந்தைகள் பெற்று அவர்கள் பள்ளிக்கூடம் போகும்போது பெரிய கட்சியில் சேர்ந்து சட்டசபைக்கும் போட்டியிட்டாள். ஜெயித்தாள். மக்களுக்காக உழைத்தாள். நிறைய நன்மைகள் செய்தாள். லட்சம் பெண்களில் ஒருவருக்குத்தான் இந்த மாதிரி அற்புதமான வாழ்க்கை கிடைக்கும். ஆளுமையான பெண்ணாக மாற முடியும்.

## முடிவுரை

'திருமணமான என் தோழிக்கு' என்ற நாவலில் நான்குவிதமான பெண்களைப் பற்றியும் அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட சிக்கல்களையும் அவர்கள் அதிலிருந்து வெளிவந்து எப்படி வெற்றி பெற்றார்கள்

என்பதைப் பற்றியும் பார்த்தோம். எனவே ஒரு பிரச்சனையின் தீவிரத்தைப் புரிந்துக்கொள்ளவும் அதை சமாளிக்கவும் காயமின்றி அதிலிருந்து நகர்ந்து கொள்ளவும் மற்றவர்களுக்கு காயம் ஏற்படுத்தாமல் இருக்கவும் இக்கட்டுரை நமக்கு உதவுகிறது. திருமணம் என்பது இரண்டு பாலருக்குமே அது கூடுதலான பொறுப்பைக் கொடுக்கின்ற விஷயம். இது மிகப்பெரிய காரியமல்ல. செய்யவே முடியாத விஷயமல்ல. ஆரம்பத்தில் சிற்சில இடர்பாடுகள் ஏற்பட்டாலும் குழந்தைகள் பிறந்து வளர்ந்து நிற்கும்போது அந்த தாய்க்கு பெரிய மரியாதை வந்துவிடுகின்றது. எனவே திருமணமான என் தோழிகளே வாழ்க்கையை சவாலாக ஏற்றுக்கொண்டு சந்தோஷமாக வாழும்படி அறிவுறுத்தப்படுகிறது என்பதை இக்கட்டுரை மூலம் நாம் அறிந்துகொள்ளலாம்.

## References

Bala Kumaran, (2009) Thirumanamana En Tholikku, Visa Publication, Chennai, India.

Kuruvammal, M. (2016) Yugakal Thorum Penkal, Kaviya Veliyedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License